No of Printed pages: 4 Roll No

## திறன்வளர் ஆசிரியர் மன்றம் மற்றும் வெற்றிக்கு வழி

## மாதிரிப் பொதுத்தேர்வு – ஜனவரி 2016

# தமிழ் இரண்டாம் தாள்

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

காலம். 2.30 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

| | | |
|---|---|---|
| அறிவுரை : | 1. | அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். |
| | 2. | நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்தவேண்டும். |
| குறிப்பு : | 1. | இவ்விடைத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது. |
| | 2. | விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும். |
| | 3. | வினாஎண் 38க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும். |

### பிரிவு–I (மதிப்பெண்கள் : 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

### பகுதி-1

**உரியவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

1. பல்+தீது__________ எனப்புணரும்.
   அ) பல்தீது ஆ) ப.்றீது இ) பற்றீது ஈ) பலதீது
2. பின்வரும் சொற்களில் தொடர்மொழி__________
   அ) கண் ஆ) படம் பார்த்தான் இ) பலகை ஈ) அந்தமான்
3. பாம்போ? கயிறோ? என்பது__________வினா
   அ) அறிவினா ஆ) அறியாவினா இ) ஐயவினா ஈ) கொளல் வினா
4. நல்லவை - இச்சொல்லை அலகிட்டால்__________எனப்பிரியும்.
   அ) நேர்நேர் ஆ) நிரைநேர் இ)நேர்நிரை ஈ) நிரைநிரை
5. மருத நிலத்திற்குரிய தெய்வம் __________
   அ) முருகன் ஆ) திருமால் இ)இந்திரன் ஈ) வருணன்

### பகுதி-2

**கோடிட்ட இடத்தைநிரப்புக.** 5 x 1 = 5

6. மலரன்ன சேவடி - இத்தொடரில் அமைந்துள்ள உவமஉருபு__________
7. அவரை உள்ளதா? என்னும் வினாவிற்கு துவரை உள்ளது எனவிடையளிப்பது __________விடை
8. மண்ணாசை கருதி போருக்குச் செல்வது__________திணை.
9. பொருந்தாக் காமம்__________எனப்படும்.
10. ஆசிரியப்பாவின் வேறு பெயர்__________

### பகுதி-3

**சுருக்கமாகவிடையளி.** 10 x 1 = 10

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.
12. கிளி கல்லால் அடிபட்டது. (உணர்ச்சித் தொடராக மாற்று)
13. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
    இன்று பேருந்துகள் ஓடாது.

14. விழி மலர் - உருவகத்தை உவமையாக மாற்று.

15. கீழ்க்காணும் பழமொழியைச் சொற்றொடரில் அமைக்க.
விளையும் பயிர் முளையிலே தெரியும்.

16. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.
தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன

17. பிறமொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அவர்கள் இருவருக்குமிடையே விவாதம் நடைபெற்றது.

18. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கிஎழுதுக.
மக்களை இலட்சிய பாதையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடை பேச்சு.

19. மரபுத் தொடரின் பொருளை எழுதுக. - முதலைக் கண்ணீர்

20. தொகைச்சொல்லை விரித்தெழுதுக.– நானிலம்

## பிரிவு–II(மதிப்பெண்கள்) : 10

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்றுவரிகளுக்குமிகாமல் விடையளிக்க. 5 x 2 = 10**

21. ஐகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்கு.
22. முற்றெச்சம் என்றால் என்ன?
23. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
24. வெற்றிலை - புணர்ச்சி விதி கூறுக.
25. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.
26. கருப்பொருள் என்பது யாது?
27. பாடாண்திணையை விளக்குக.

## பிரிவு–III(மதிப்பெண்கள்) : 50

### பகுதி-1

| குறிப்பு : பகுதி 3-ல் வினாஎண் 35-ல் காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது. |
|---|

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டினுக்குவிடையளிக்க. 2x 5 = 10**

28. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?

29. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் - இக்குறட்பாவில் பயின்றுள்ள அணியை விளக்கு.

(அல்லது)

தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு

### பகுதி-2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க. 2x 5 = 10**

31. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.
32. ‘மெல்லமெல்ல மற’ என்னும் சிறுகதையின் மையக் கருத்து மாறாமல் சுருக்கி எழுதுக.
33. குறட்டை ஒலி கதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்கி எழுதுக.

### பகுதி-3

**34. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க 3+2=5**

**(அ)** “சுரேஷ் **வாட் ஹேப்பன்ட்?** ஏன் **லேட்டா**வர்றே? வழியில் ஒரே **டிராபிக் ஜாம்டா**, அதனால்தான் **லேட்**. சரிசரி **பஸ்** எத்தனை மணிக்கு வரும்? **டிக்கட்** கிடைச்சுதா? **பஸ் டென் தர்ட்டிக்கு** வரும் **லாஸ்ட் வீக்கே ரிசர்வ்** செய்தாச்சு.

**(ஆ) கீழ்உள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றி எழுதுக.**

**53, 284, 61, 795**

**35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க** **3+2=5**

**(அ)** Trees are very useful to us. They give us timber and fire wood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

**ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

1. East or west, home is the best.
2. Make hay while the sun shine.
3. A friend in need is a friend indeed
4. Work is worship.

**35. குறிப்பு : காதுகேளாத மாணவர்களுக்கான மாற்று வினா** **5x 1 = 5**

நாட்டு விடுதலைப் போராட்டக் காலத்தில், பல்வேறு காலத்திய தேசிய நாடகங்கள் அரங்கேறின. தமிழ்நாட்டில் முதன்முதலில் நடத்தப்பட்ட தேசிய சமூகநாடகம் கதரின் வெற்றி என்னும் நாடகம்தான். இதனைத் தொடர்ந்து தேசியக்கொடி, தேசபக்தி முதலிய நாடகங்கள் அரங்கேறின.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்துறைக்குப் பெருந்தொண்டு புரிந்தவர் சங்கரதாசு சுவாமிகள். நாடக உலகின் இமயமலை என்றும், தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என்றும் அவர் அழைக்கப்பட்டார். பிரகலாதன், சிறுத்தொண்டர், இலவகுசா,பவளக்கொடி, அபிமன்யு, சுந்தரி முதலான நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.

தமிழ்நாடகத்தந்தை என்று போற்றப்பட்ட பம்மல் சம்பந்தனார், தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். சேக்சுபியரின் ஆங்கில நாடகங்களை மொழி பெயர்த்துள்ளார். இவரது மனோகரன் நாடகம் எழுபது ஆண்டுகளாகத் தமிழ் நாடக மேடைகளில் புகழ் பெற்று விளங்கியது.

1. தமிழ்நாட்டில் அரங்கேறிய முதல் தேசிய சமுதாய நாடகம் எது?
2. தமிழ்நாடகத்தின் தலைமையாசிரியர் என்று அழைக்கப்பட்டவர் யார்?
3. சேக்சுபியரின் நாடகங்களை மொழி பெயர்த்தவர் யார்?
4. சங்கரதாசு சுவாமிகள் எழுதிய நாடகங்கள் சிலவற்றைக் கூறுக.
5. விடுதலைப் போராட்டக் காலத்தில் அரங்கேறிய நாடகங்கள் எவை?

## பகுதி-4

**36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** **1x 5 = 5**

**(அ)** கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

கண்ணன் பத்தாம் வகுப்பில் படிக்கிறான். காலை ஐந்து மணிக்கே எழுந்துவிடுவான். அவனுடைய அம்மாவுக்கு இயன்ற உதவிகளைச் செய்வான். பின்னர் எட்டுமணி அளவில் நடந்தே பள்ளிக்குச் செல்வான். ஒருநாள் ஓட்டமும் நடையுமாகப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது சாலையில்….

**அல்லது**

**(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டுவரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.**

பள்ளி அல்லது குழந்தை

## பகுதி-5

**37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தினை எழுதி,அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்தெழுதுக.** **1x 5 = 5**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
    தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புதுநூல்கள்
    தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்

சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.

**பகுதி-6** **1x 5 = 5**

**38. தமிழ்க்குமரன் என்பவர் இந்தியன் வங்கி, மதுரைகிளையில் சேமிப்புக் கணக்கு வைத்துள்ளார். கணக்கு எண் 11205847143. தனது வங்கிக்கணக்கில் ரூ10,000/-செலுத்துவதற்காக வங்கிக்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னை தமிழ்க்குமரனாகப் பாவித்து, விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து பூர்த்தி செய்க.**

**பகுதி-7**

**39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அதுகுறித்த வினாக்களுக்கு விடையளிக்க.** **3+2=5**

பதினோராம் வகுப்பில் சேர்ந்து சிலநாள்கள் ஆகின்றன. தேவி, அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்துவிட்டன. ஆனால், அவளின் பெற்றோர் அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை. ‘‘நான் சொன்னால் சொன்னதுதான். நீ படித்ததுபோதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்யவேண்டியதுதான்’’ என்று கூறியவாறே அவளுடைய தந்தை வெளியே சென்றுவிட்டார்.

‘‘அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்’’ என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள், தேவி.

1. இந்நிலையில் தேவி என்ன முடிவெடுப்பாள்?
2. உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள்?
3. இச்சூழலில் தேவையான வாழ்க்கைத் திறனைக் குறிப்பிடுக.

**ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்துவிடையளிக்க.**

பாண்டியன் ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுவான். ஆனால் அவன் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்யவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவனைத் தனிப்படிப்புக்கும் அனுப்புகிறார். தனிப்படிப்பு சொல்லித் தருபவரின் பழகுந்தன்மை அவனுக்குப் பிடிக்கவில்லை. வீட்டில் சொன்னால் தனிப்படிப்புக்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறான் என்று நினைப்பார்கள் என மனத்துயரம் கொள்கிறான்.

1. பாண்டியன் தன் சிக்கலுக்கு எவ்வாறு தீர்வு காண்பான்?
2. நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

**பிரிவு–IV(மதிப்பெண்) : 20**

**பகுதி-1**

**40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** **1x 10 = 10**

**(அ) பேருந்து வசதி வேண்டி போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக**

**(அல்லது)**

**(ஆ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.**

**பகுதி-2**

**41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக.** **1x 10 = 10**

**(அ)** சிறுதுளி பெருவெள்ளம் - சிக்கன வாழ்வு - சிக்கனமும் சிறுசேமிப்பும் - சேமிப்பின் அவசியம் - சேமிக்கும் முறைகள் - நன்மைகள். **அல்லது**

**(ஆ)** கணினி–தோற்றம் - வளர்ச்சி - இணையம் - இணையதளவசதிகள் - கணினிவழிக்கல்வி– கணினியின் வியத்தகு சாதனைகள் - பயன்படும் துறைகள் - உலகம் உள்ளங்கையில்